# வடகிழக்கு பருவ மழை – புயல் மற்றும் வெள்ளக் காலத்தில் ஏற்படும் மின் விபத்துக்கள் தவிர்ப்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ள

## <u>மின்சார பாதுகாப்பு வழிமுறைகள்</u>

| | | |
|---|---|---|
| 1 | மின்சார ஒயரிங் வேலைகளை அரசு உரிமம் பெற்றுள்ள மின் ஒப்பந்தக்காரர் மூலமாக மட்டுமே செய்யுங்கள். | |
| 2 | ஐ.எஸ்.ஐ.முத்திரை பெற்ற தரமான மின்சார சாதனங்களை மட்டுமே வாங்கிப் பயன்படுத்துங்கள். | |
| 3 | மின்சார பிளக்குகளைப் பொருத்துவதற்கு முன்னரும், எடுப்பதற்கு முன்னரும் சுவிட்சை ‘ஆப்’ செய்து விடுங்கள். | |
| 4 | ரெப்ரிஜிரேட்டர், கிரைண்டர் போன்ற வீட்டு உபயோக மின்சாதனங்களுக்கு, நில இணைப்புடன் கூடிய மூன்று பின் சாக்கெட் உள்ள பிளக்குகள் மூலமாக மட்டுமே மின் இணைப்பு கொடுங்கள். | |
| 5 | ஈ.எல்.சி.பி. (மின் கசிவு தடுப்பான்)யை பயனீட்டாளரின் இல்லங்களில் உள்ள மெயின் ஸ்விட்ச் போர்டில் பொருத்தி மின்கசிவினால் ஏற்படும் மின்விபத்தை தவிர்த்திடுவீர். | |
| 6 | உடைந்த சுவிட்சுகளையும் , பிளக்குகளையும் உடனே மாற்றி விடுங்கள். பழுதுபட்ட மின்சார சாதனங்களை உபயோகிக்காதீர்கள். | |
| 7 | அ. | டி.வி.ஆண்டனாவை வீட்டின் அருகே செல்லும் மேல்நிலை கம்பிகளுக்கு அருகில் கட்டாதீர்கள். |
| | ஆ | டி.வி. ஆண்டனாவின் ஸ்டே வயரை மின் கம்பத்தில் கட்டாதீர்கள். |

| | | |
|---|---|---|
| | இ. | கேபிள் டி.வி வயர்களை மேல்நிலை கம்பிகளுக்கு அருகில் கொண்டு செல்லாதீர்கள். |
| 8 | ஒவ்வொரு வீட்டிற்கும் சரியான நில இணைப்பு (எர்த் பைப்) போடுவதுடன் அதனைக் குழந்தைகள் மற்றும் விலங்குகள் தொடாத வகையில் அமைத்து சரியாக பராமரிக்கவும். | |
| 9 | சுவிட்சுகள், பிளக்குகள் போன்றவற்றை, குழந்தைகளுக்கு எட்டாத உயரத்தில் அமையுங்கள். | |
| 10 | ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை உங்கள் வீட்டின் ஒயரிங்குகளை சோதனை செய்து தேவைப்பட்டால் மாற்றிக்கொள்ளுங்கள். | |
| 11 | மின்சார கம்பத்திற்காக போடப்பட்டுள்ள stay wire–ன் மீது அல்லது மின் கம்பத்தின்மீது கொடி கயிறு கட்டி துணி காயவைக்கும் செயலைத் தவிர்க்கவும். | |
| 12 | குளியலறையிலும் கழிப்பறையிலும் ஈரமான இடங்களிலும் சுவிட்சுகளைப் பொருத்தாதீர்கள். | |
| 13 | சுவற்றின் உள் பகுதியில் மின்சாரத்தை எடுத்துச் செல்லும் வயர்களுடன் கூடிய பி.வி.சி. பைப்புகள் பதிக்கப்பட்டிருந்தால் அப்பகுதிகளில் ஆணி அடிப்பதை தவிர்க்கவும். | |
| 14 | மின் இணைப்பிற்கு extension cord-கள் உபயோகிக்கும் போது அவைகளில் பழுதுகள் ஏதும் இல்லாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும். | |
| 15 | மின் கம்பத்திலோ அவற்றைத் தாங்கும் கம்பிகளிலோ கால்நடைகளைக் கட்டாதீர்கள். | |
| 16 | மின் கம்பங்களை பந்தல்களாக பயன்படுத்தக்கூடாது. அதன்மீது விளம்பர பலகைகளை கட்டக்கூடாது. | |
| 17 | மழைகாலங்களில் மின்மாற்றிகள், மின்கம்பங்கள், மின்பகிர்வுப் பெட்டிகள், Stay வயர்கள் ஆகியவற்றின் அருகே செல்லாதீர்கள். | |
| 18 | மழையாலும், பெருங்காற்றாலும் அறுந்து விழுந்த மேல்நிலை மின்சார கம்பி அருகே செல்லாதீர்கள். அதைக் குறித்து மின்வாரிய அலுவலகத்துக்கு உடனடியாகத் தகவல் அளியுங்கள். | |
| 19 | மேல்நிலை மின்சார கம்பிகளுக்கு அருகில் கட்டிடங்களை போதுமான இடைவெளி விட்டு | |

| | | |
|---|---|---|
| | கட்டவேண்டும். மேலும் விபரங்களுக்கு மின்சார வாரியம் மற்றும் மின்சார ஆய்வுத்துறை அலுவலர்களை அணுகவும். | |
| 20 | தமிழ்நாடு மின்வாரிய மின் மாற்றிகள் மற்றும் துணை மின் நிலையத்திற்காக போடப்பட்டுள்ள வேலியின் அருகில் சிறுநீர் கழிக்க செல்லாதீர். | |
| 21 | மின் வாரியத்தின் மேல்நிலை மின்சார கம்பிகளுக்கு அருகில் உள்ள மரக்கிளைகளை வெட்டுவதற்கு மின்சார வாரியத்தின் அலுவலர்களை அணுகவும். | |
| 22 | அவசர நேரங்களில் மின் இணைப்பினை விரைந்து துண்டிக்கும் வகையில் மின் கருவிகளின் சுவிட்சுகள் இருப்பிடம் அமையவேண்டும். | |
| 23 | மின் சாதனங்கள் உபயோகத்தில் இல்லாத பட்சத்தில், சுவிட்சை ‘‘ஆப்’’ செய்து வைக்கவும். | |
| 24 | அ. | மின்சார தீவிபத்துக்களுக்குண்டான தீயணைப்பான்களை மட்டுமே மின்சாதனங்களில் தீவிபத்து ஏற்படும்போது பயன்படுத்தவேண்டும். உலர்ந்த மணல், கம்பளிப் போர்வை, உலர்ந்த ரசாயணப் பொடி (DCP)அல்லது கரியமில வாயு (Co2)ஆகிய தீயணைப்பான்களைப் பயன்படுத்தவும். |
| | ஆ. | மின்சாரத்தினால் ஏற்பட்ட தீயினை தண்ணீர் கொண்டு அணைக்க முயற்சிக்கவேண்டாம். |
| 25 | தீ விபத்து மின்சாரத்தினால் ஏற்பட்டதெனில், உடனே மெயின் ஸ்விட்சை நிறுத்திவிடவேண்டும். | |
| 26 | எந்த மின் சர்க்யுட்டையும் அளவுக்கு மீறி பளு ஏற்றக் கூடாது. ஸ்விட்ச் மற்றும் பியூஸ் போன்றவைகளை மாற்றும் போது சரியான அதே அளவு திறன் கொண்டவைகளையே பொருத்தவேண்டும். | |
| 27 | இடி அல்லது மின்னலின்போது வெட்டவெளியில் இருக்காதீர்கள் . | |
| | அ. | இடி அல்லது மின்னலின்போது உடனடியாக கான்கிரிட் கூரையிலான பெரிய கட்டிடம் |

| | | |
|---|---|---|
| | | வீடு போன்ற பெரிய கட்டிடங்களிலோ, உலோகத்தால் மேலே மூடப்பட்ட பேருந்து, கார், வேன் போன்ற வாகனங்களிலோ தஞ்சமடையுங்கள். |
| | ஆ. | இடி அல்லது மின்னலின்போது குடிசை வீட்டிலோ, மரத்தின் அடியிலோ, பேருந்து நிறுத்த நிழற்குடையின் கீழோ, தஞ்சம் புகாதீர்கள். |
| 28 | இடி அல்லது மின்னலின்போது தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளை விட்டு அகலுங்கள். | |
| 29 | இடி அல்லது மின்னலின்போது தஞ்சம் அடைய அருகில் எதுவும் இல்லாதபட்சத்தில், மின் கம்பிகள், மின் கம்பங்கள், மரங்கள், உலோக கம்பி வேலி போன்றவை இல்லாத தாழ்வான பகுதிளை தேர்ந்தெடுங்கள். | |
| 30 | இடி அல்லது மின்னலின்போது டி.வி., மிக்ஸி, கிரைண்டர், கணினி மற்றும் தொலைபேசி போன்றவற்றை பயன்படுத்தாதீர்கள். | |
| 31 | இடி அல்லது மின்னலின்போது திறந்த நிலையில் உள்ள ஜன்னல், கதவு போன்றவற்றின் அருகில் இருக்காதீர்கள். | |

பொது மக்கள் நலன் கருதி – மின் ஆய்வுத் துறை

Sd/-XXX

அரசுத் தலைமை மின் ஆய்வாளர்

To ensure electrical safety during the monsoon period, cyclone or flood.

## ELECTRICAL SAFETY PRACTICES

| | |
|---|---|
| 1) | Get all the electrical works done only by licensed electrical contractors. |
| 2) | Use only ISI marked electrical appliances, cables and wires. |
| 3) | Switch off the supply before inserting and removing the plug socket outlets. |
| 4) | Electricity supply for Refrigerator, Wet grinder and other home appliances should be availed through 3 pin plug sockets with earthing provision. |
| 5) | Use 'ELCB'the "LIFE SAVER" at the consumer's main supply point. |
| 6) | Replace damaged electrical components like switches, plug sockets etc., immediately when noticed. |
| 7) | While installing the T.V. antennas:<br>(a) Don't install them nearer to the OH electrical lines.<br>(b) Don't tie the stay wires of T.V. antenna poles to the structures of electrical installations (eg. service poles, lamp fittings etc.)<br>(c) Don't carry the cable T.V. wires nearer to the OH electrical lines. |
| 8) | Provide and maintain earth electrodes to earth the conducting body of electrical appliances . |
| 9) | Install switches, plug sockets etc., at an inaccessible height and away from the |

| | |
|---|---|
| | approach of children. |
| 10) | Periodically test the electrical installation for insulation strength and replace if required. |
| 11) | Avoid using stay wires and electrical fixtures as poles *I* supports to tie wires*I* ropes to dry wet clothes. |
| 12) | Do not install switches inside bathrooms, toilets &other wet places. |
| 13) | Do not nail on the wall where concealed PVC conduit wiring are done. |
| 14) | Make sure that extension cords of portable/hand held appliances are free from cuts (breaks) improper insulation, patched-up insulation, kinks or joints. |
| 15) | Do not secure poultries/domestic animals to the electric poles or the stay wires. |
| 16) | Don't use electric poles as support to pandals or displaying advertisement boards. |
| 17) | Don't go near or touch the transformers, pillar boxes, electrical poles, stay wires , fencing etc. |
| 18) | If any snapped electricity conductor is noticed, inform the electricity board official; don't touch or go near them. |
| 19) | Don't construct buildings near the electricity lines, consult electricity supply officials before planning for such construction. |
| 20) | Don't go near the fencing of electrical transformers / structure yard on streets for nature's call. |
| 21) | Approach TANGEDCO officials to trim the tree branches touching the OH lines. |
| 22) | Make sure that there is easy access to switch off the supply source quickly in case |

| | |
|---|---|
| | of an emergency. |
| 23) | Switch off electrical appliances when not in use. |
| 24)<br><br>25) | Do not use fire extinguisher on electrical equipment unless it is clearly marked for that purpose. Use sand and blanket instead.<br>Never attempt to extinguish electrical fire with water. |
| 26) | In case of short circuit fault or a fire, switch off the Mains immediately. |
| 27) | Never over-load an electrical point; while replacing electrical gadgets, replace with the same rating. |
| 28) | If there is thunder or lightning, seek shelter immediately.<br>(a) Move to a large sturdy building or to metal topped vehicle such as car or bus.<br>(b) Do not take shelter under isolated trees or isolated huts, tents, etc., |
| 29) | Stay away from water or water logged areas. |
| 30) | If no shelter is nearby, find a low spot away from trees, power lines and poles and metal fences. |
| 31) | Do not use electrical appliances and phones during lightning or thunder. |
| 32) | Do not stand near open windows or doors during thunder or lightning. |

For interest of the general public – Electrical Inspectorate

Sd/-XXX

Chief Electrical Inspector to Government